உ



இணுவிலம்பதியைப் பிறப்பிடமாகவும்
வாழ்விடமாகவும் வரித்துக்
கொண்டவரும்

ஓய்வு பெற்ற புகையிரத நிலைய
அதிபருமான

அமரர்

# கந்தையா இராசரத்தினம்

(இராசா)

அவர்கள் சிவபதப்பேறு
குறித்த

# நினைவு மலர்

08-05-1999

உ
சிவமயம்



# அமரர் கந்தையா இராசரத்தினம்
# (இராசா)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| **06-10-1919** | **08-04-1999** |

திதி வெண்பா

ஆண்டுவெகு தானியமாம் ஆனபங்கு னிமாதம்
பூண்ட அபரபக்க ஸப்தமியில் — ஈண்டிருந்து
கந்தையா ராசரட்ணம் கண்ணுதலான் பொற்பாதம்
பந்தமெனச் சென்றார் பணிந்து.

**அமரர் திரு. கந்தையா இராசரத்தினம் (இராசா)**

**(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்)**

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஈழத்தின் வடபுலமான யாழ்ப்பாணத்தில் இணுவையூரின் மேற்குப் பகுதியில் காலம் சென்ற திரு. கார்த்திகேசு கந்தையாவிற்கும் காலம் சென்ற திருமதி கந்தையா தங்கம் அவர்களிற்கும் மூத்தபுதல்வராக 06-10-1919 ம் ஆண்டு பிறந்தார். திரு. க. குமரேசுவும் திரு. க. விசுவலிங்கமும் (விநாயகர் விவசாயக் களஞ்சியம், இணுவில்) திரு. க. கயிலாயபிள்ளையும் (ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்) திரு க. குமாரசாமியும் (சிவசக்தி ரேடர்ஸ், யாழ்ப்பாணம்) அமரர் கந்தையா இராசரத்தினம் அவர்களிற்குச் சகோதரங்களாகத் திகழ்ந்தார்கள்.

அமரர் கந்தையா இராசரத்தினம் அவர்கள் தனது இளம் வயதில் தந்தையை இழந்தார். பின்னர் உயர்கல்வியை யாழ். இந்துக் கல்லூரியில் ஆரம்பித்து லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சையில் முதல் பிரிவில் உயர் சித்தியைப் பெற்றார். இக்கல்வியைக் கற்று முடியும் வரை இவரது பேரனார் திரு. கார்த்திகேசு அவர்கள் இவரிற்கு ஊக்கத்தை அளித்தார்.

பின்னர் அமரர் கந்தையா இராசரத்தினம் அவர்கள் புகையிரதத் திணைக்களத்தில் லிகிதராக பதவியேற்று படிப்படியாக உயர்வு பெற்று இறுதியில் புகையிரத நிலைய அதிபராக வியாங்கொடை, சிலாபம், அம்பன்பொல ஆகிய நிலையங்களில் மேலதிகாரிகளின் பாராட்டுதல்களைப் பெற்று மிகவும் திறமையாகக் கடமையாற்றினார்.

அமரர் கந்தையா இராசரத்தினம் அவர்கள் இணுவில் மேற்கைச் சேர்ந்த விதானையார் சிவசம்பு தம்பதிகளின்சிரேஷ்ட புதல்வி பரமேஸ்வரி அவர்களை சைவ மரபிற்கேற்ப சமய ஆசாரப் படி திருமணம் செய்து கொண்டார்.

அமரர் கந்தையா இராசரத்தினம் அவர்கள் தனது குடும்பம் என்ற குறுகிய வட்டத்துள் வாழாது பிறர்கு உதவ வேண்டும் என்ற மனப்பாங்குடையவர். இவர் தனது சகோதரங்களையும் பேணிப் பாதுகாத்து அத்துடன் நில்லாமல் தனது மைத்துனர்களாகிய காலம் சென்ற திரு. சி. பாலசிங்கம் (நிர்வாக உத்தியோகத்தர், மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களம்) திரு. சி. துரைசிங்கம் (ஓய்வு பெற்ற கிராம சேவை உத்தியோகத்தர்) திரு. சி. இராமநாதன் அவர்களிற்கும் பேருதவிகள் புரிந்து, திருப்தி கண்டார். அதுமட்டுமல்லாமல் ஏழை எளிய வர்களுக்கு உதவுவதில் பரம திருப்தியடைந்தார்.

அமரர் கந்தையா இராசரத்தினம் அவர்களின் அன்பும் பண்பும் நிறைந்த வாழ்வின் பயனாக திரு. இ. நித்தியானந்தன் (ஆசிரியர் வவுனியா) திருமதி அ. புஸ்பகுமாரி, காலஞ்சென்ற திரு. இ. கமலானந்தன், திருமதி தே. வசந்தகுமாரி, திரு. இ. பவானந்தன், திருமதி க. தாரணி (கனடா) திரு. இ. மணிவண்ணன் (ஜேர்மனி) செல்வி இ. வான்மதி ஆகிய மக்கட் செல்வங்களைப் பெற்றார். இவர் தன்னுடைய பிள்ளைகளை உயர்கல்வி வரை திறம்படக் கற்பித்து மூத்த புதல்வி புஸ்பகுமாரியை இணுவில் கிழக்கைச் சேர்ந்த திரு. கந்தையா அம்பலவாணர் தம்பதிகளின் ஏக புதல்வன் திரு. அ. அருள்நாதன் (இலங்கை மின்சாரசபை, யாழ்ப்பாணம்) அவர்களிற்குத் திருமணம் செய்து வைத்தார். இவர்கள் இல்வாழ்வின் பயனாக செல்வி அ. சுகன்யா (உடுவில் மகளிர் கல்லூரி) செல்வன் அ. சுஜந்தன் (மார்ல்போ ரேடிங் கொம்பனி, கொழும்பு) செல்வன் அ. சுபாஸ்ராவ் (இணுவில் மத்திய கல்லூரி) செல்வி அ. சுபனா (உடுவில் மகளிர் கல்லூரி)செல்வன் அ. சுபராஜ் (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி) ஆகிய செல்வங்களைப் பெற்று இனிதே வாழ்கின்றனர்.

இவரது இரண்டாவது புத்திரியாகிய வசந்தகுமாரியை இணுவில் மேற்கைச்சேர்ந்த திரு. சி மாசிலாமணி தம்பதிகளின் மூத்த புதல்வன் தேவநேரு (கிராம சேவை உத்தியோகத்தர்) அவர்களிற்கு திருமணம் செய்து வைத்தார். இவர்களிற்கு செல்வன் தே. மகிபன் (இணுவில் மத்திய கல்லூரி) செல்வி தே. மகதி (உடுவில் மகளிர் கல்லூரி) செல்வி தே. தருணி (இணுவில் மத்திய கல்லூரி) செல்வன் தே. பரணன் இணுவில் மத்திய கல்லூரி) ஆகிய செல்வங்களைப் பெற்று இனிதே வாழும் காலத்தில் திரு. ம. தேவநேரு அவர்கள் இயற்கை மரணமெய்தினார்.



அமரர் கந்தையா இராசரத்தினம் அவர்களது மூத்த புதல்வனாகிய திரு. இ. நித்தியானந்தம் அவர்களை கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திரு. பொன்னப்பா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி தனலட்சுமி அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார். இவர்களிற்கு செல்வி நி. சோபனா (வேப்பங்குளம் இந்து மகா வித்தியாலயம்), செல்வன் நி. நிர்சாந்த் (வேப்பங்குளம் இந்து மகா வித்தியாலயம்) ஆகிய செல்வங்களை பெற்று இனிதே வாழ்கின்றார்கள்.

இவரது மூன்றாவது புதல்வியாகிய தாரணியை இணுவில் மேற்கைச் சேர்ந்த திரு. வேலாயுதபிள்ளை தம்பதிகளின் புத்திரன் கருணாநிதி (கனடா) அவர்களிற்கும் திருமணம் செய்து வைத்தார் இவர்களிற்கு செல்வன். க. துயன் (கனடா) செல்வி. க, கவி (கனடா) செல்வி. க. கபிஷா. (கனடா) ஆகிய செல்வங்களைப் பெற்று கனடாவில் இனிதே வாழ்கிறார்கள்.

இவரது நான்காவது புதல்வனாகிய மணிவண்ணன் அவர்கள் ஜேர்மனியைச் சேர்ந்த பிர்கிற் (Birgit) அவர்களை திருமணம் செய்தார். இவர்களிற்கு செல்வன். ம. பஸ்கல் மாறன் (ஜேர்மனி செல்வி. ம. தேவிடமாறா (ஜேர்மனி) செல்வி. ம. தேவிதெபேறா (ஜேர்மனி) செல்வன். மா. மாசல் (ஜேர்மனி) ஆகிய செல்வங்களைப் பெற்று ஜேர்மனியில் இனிதே வாழ்கின்றார்கள்.

அன்னாரது திடீர் மறைவு எல்லோரையும் துன்ப வெள்ளத்துள் ஆழ்த்தினாலும் ''உறங்குவது போலும் சாக்காடு'' என்ற முதுமொழிக்கிணங்க தனது அன்றாடக் கடமைகளை நிறைவேற்றிக் கொண்ட பின் துயிலச் சென்றது போல் எவ்வித கஸ்டமும் இன்றி இறைபதமெய்திய அமரர் கந்தையா இராசரத்தினம் அவர்களின் புனித வாழ்வை எண்ணி வியப்படையும் அவரது ஏழு பிள்ளைகளும் மருமக்களும் தந்தையாரது புண்ணிய ஆத்மா சாந்தி பெற பிரார்த்திப்போமாக.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்''

''நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு''

— திருக்குறள்

உ
சிவமயம்

# பஞ்சதோத்திரம்

திருச்சிற்றம்பலம்

## விநாயக வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை யணுவையார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள் தங்கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனை கடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும் பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே

## திருவாசகம்

சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கிவாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்களார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையேஉன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனையமேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தமியனேற்கே.



## திருவிசைப்பா

தோழியாம் செய்த தொழில் என்
எம் பெருமான் துணைமலர் சேவடி காண்பான்
ஊழிதோறூழி உணர்ந்து
உளம் கசிந்து உருகும்
கேழலும் புள்ளுமாகி நின்றிருவர் கெழுவுகம்
பலைசெய் கீழ்க் கோட்டூர்
வாழிய மணி யம்பலவனைக் காண்பான்
மயங்கவும் மாலொழி யாமே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி
உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு
நாம் பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின்வேண்டுகின் றார்
"பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்பு உண்டேலுன்னை யென்றும்
மறவாமை வேண்டுமின்னும்
வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ யாடும் போதுன்
அடியின் கீழிருக்க" என்றார்.

## திருமந்திரம்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளந் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளமணி விளக்கே.
ஆசையறுமின்கள் யாசையறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசையறுமின்கள்
ஆசைபடப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தமாமே.

## திருப்புகழ்

இயலிசையிலுசித வஞ்சிக் கயர்வாகி
இரவுபகல் மனதுசிந்தித் துழலாதே
உயர்கருணை புரியுமின்பக் கடல்மூழ்கி
உனையெனது ளறியுமன்பத் தருவாயே
மயில்தகர்கலிடைய ரந்தத் தினைகாவல்
வனசகுற மகளை வந்தித் தணைவோனே
கயிலைமலையனைய செந்திற் பதிவாழ்வே
கரிமுகவனிளைய கந்தப் பெருமாளே.

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும்அதுவிளிந் தற்று.

— திருக்குறள்



உ

சிவமயம்

ஔவையார் அருளிச் செய்த

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத
திருந்திய முதலைந் தெழுத்தும தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவல யந் தன்னில்
திருவடி வைத்துத் திர மிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை யறுத் திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே

இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் ஆவில் உணர்த்திக்
குண்டலியதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்பும் கருதறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்ரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முகதூலமுஞ் சதுர்முகசூர்க்கமமும்
எண்முகமாக இனி தெனக் கருளிப்
புரியட்டகாயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக்கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக்களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள் தரும் ஆனந்தம் தந்து அழுத்தி என் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டி
சித்தித்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தி
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டித்
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நெறியைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே

திருச்சிற்றம்பலம்



உ

# கந்த சஷ்டி கவசம்

## காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம்நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் — கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்த
சஷ்டி கவசந் தனை.

## குறள் — வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையநடஞ் செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவேன் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக

இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக

ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹ நிறநிற நிறனெ

வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக

ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுடிகு டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து



என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க

கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க

ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க

நாவிற சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்

அடியேனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்பச் சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனையடியினில் அரும்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட



மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தரெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு

முட்டு முட்டு முழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்

எலியுங் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைக்ஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி

பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே

அருதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை

இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்

என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனை
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் குடிவாழ்
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்

மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க வென் வறுமைக ணீங்க

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்தாய்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய



பாலன் தேவராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மற்றவ ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணவாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

கந்த சஷ்டி கவசம் முற்றிற்றும்.

# நன்றி

எங்கள் குடும்பத் தலைவர்
திரு. கந்தையா இராசரத்தினம் (இராசா)
அவர்களின்
மறைவு கேட்டு உதவிய
அனைவருக்கும்,

இன்று நடைபெறும் சபிண்டீகரண
நிகழ்வுகள் சிறக்க பல்லாற்றாலும்
உதவிய உள்ளங்கட்கும்,

எமது மனம்
நிறைந்த நன்றி.

குடும்பத்தினர்

துவாரகா,
இணுவில் மேற்கு,
இணுவில்.
08-05-99